# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

*********************

## விசா விண்ணப்பங்கள் குறித்த நடைமுறை

தற்போதைய சூழ்நிலையினை கவனத்தில்கொள்ளும் அதேநேரம், எமது விசா சேவையினை பெற்றுக்கொள்ளும் இலங்கை மற்றும் ஏனைய நாடுகளைச்சேர்ந்த பிரஜைகளின் சௌகரியங்களுக்கு முக்கியத்துவமளித்தும், தொடர்புடைய பணியாளர்களின் பயணங்கள் குறித்த அக்கறையுடனும் எமது விசா விண்ணப்ப முகவர் நிலையமான IVS வாரத்தில் மூன்று நாட்கள் மாத்திரமே விசா விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும். இதற்கமைய 2022 ஜூலை 04 ஆம் திகதி முதல் செவ்வாய்க்கிழமை, வியாழக்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமை ஆகிய நாட்களில் மாத்திரம் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். அத்துடன் 4ஆம் திகதி திங்கட்கிழமையும் எந்த விதமான முன்பதிவுகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பது குறிப்பிடத்தக்கவிடயமாகும். மேலும், குறித்த தினங்கள் உயர் ஸ்தானிகராலயத்தினால் அறிவிக்கப்பட்டிருக்கும் விடுமுறை நாட்களாக இருந்தால் அத்தினங்களிலும் எதுவிதமான சேவைகளும் இடம்பெறமாட்டாது.

சகல விசா விண்ணப்பதாரிகளும் முற்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளும்படி வேண்டப்படுவதுடன் மறு அறிவித்தல்வரையில் விசா விண்ணப்பங்களை மேலே கூறப்பட்ட தினங்களில் மாத்திரம் IVS நிலையத்தில் சமர்ப்பிக்கவும்.

தற்போது காணப்படும் சூழ்நிலையில், சகலருக்கும் அவர்களின் புரிந்துணர்வு மற்றும் ஒத்துழைப்புக்காக நாம் நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றோம்.

********

**கொழும்பு**
**01 ஜூலை 2022**